
ஸ்ரீராம் ,ஜெய ராம்; ஜெய ஜெயராம் ;ஓம்!!!




பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா

உ



ஸ்ரீராம் , ஜெய ராம் ; ஜெய ஜெய ராம் ; ஓம் !!!

பாபா.

ஸத்யம் பேசு. தர்மம் செய்.

நாவை அடக்கு. கருணையோடு இரு.

அன்பர்களுக்கு ஓம் ஓர் அறிமுகம்.

ஸ்ரீ ராம், ஜெயராம், ஜெய ஜெய ராம், ஓம்.

ஓ எம் அன்பும், அறிவும் நிறைந்த குழந்தைகளுக்கு, ஓர் வைத்தியம் உங்கள் பொற்றாமரை அடிகளை பணிந்து உங்கள் "திருவடித் தூளி" எம் சென்னி சூடி. அதிரகஸ்யமாயும், அதீதசக்திவாய்ந்ததுமான, நீங்கள் எந்த நொடியும் ஓர்மையுடன் ஜபித்து வரும் மந்திரமாகிய ஸ்ரீ ராம், ஜெயராம், ஜெய ஜெயராம், ஓம் !!! என்ற ஸ்ரீ ஆஞ்சநேயர் அருளிய மஹாமந்திரத்திற்கு அவர் அருளினையும், எம் ஸ்ரீ குருதேவர் அருளாசியினையும், அவர் உணர்த்த யாம் ஓர் கருவியாகவே இருந்து இயங்குகின்றோம்.

இதில் குற்றம் குறை தோற்றின்

குற்றத்தை நீக்கி குணத்தைமட்டும் ஏற்றுக் கொள்ள பணிகிறோம்.

ஓர் சுத்த வைத்தியமாகிய யாம் இப்பாரதபூமியெங்கும் தூலமாக சென்றிருக்கிறோம். சூட்சுமமாக உலகமெங்கும் உணர்ந்திருக்கிறோம். இந்த கேரளா நாட்டில் உள்ள காஞ்சன் காடு. என்ற இடத்திலுள்ள ஸ்ரீ மஹான் ராம்தாஸ் (பப்பா) அவர்களின் ஸ்ரீ **ஆனந்த ஆஸ்ரமம்** போல் இவ்வுலகில் "ஸ்ரீ ராமநாமத்திற்கே" உரிய இடம் எங்குமில்லை.

தற் புகழ்ச்சியாகவோ பெரும் புகழும் வேண்டுமென்ற எந்த "நச்சு எண்ணமும்" எமக்கில்லை. நற்சமயத்தை நடத்தி வரும் ஸ்ரீ மஹான் ஸ்ரீ சத்சித் ஆனந்த ஸ்வாமி ஜீக்கும் அவர் பிரதிநிதியாகிய ஸ்ரீ மஹான் ஸ்ரீ முக்தானந்த ஸ்வாமி ஜீக்கும் இவ் வேழையின் பணிவான வணக்கங்கள்.

பாபா.

ஸத்யம் பேசு. நாவை அடக்கு.

தர்மம் செய். கருணையோடு இரு.

# ஸ்ரீராம், ஜெய ராம், ஜெய ஜெய ராம், ஓம்!!!

இது நைஷ்டிக பிரம்மச்சாரி ஆஞ்சநேயரின் மூலமந்திரம். இதை ஆரம்பத்தில் தம் ஸத்சிஷ்யராயும், ஓர் பாகவதோத்தமராயும், வால்மீகி ராமாயணத்தை தத்வார்த்தியில் எழுதியவராயும், வால்மீகி அம்ஸபூதராயும், விளங்கிய ஸ்ரீ துளஸிதாஸருக்கு எம் ஸ்ரீ ஆஞ்சநேயர் உபதேசித்த மூலமந்திரமாகும். இதன் கருத்தை சற்று தொட்டுக் காட்டுகிறோம் உணர்க!

ஓம் அருள் ஞானக் குழந்தைகளே! இது பக்தி சம்பந்தமாகும் ஞானத்தின் அதீத நிலைக்கு சென்றுவிட்டவர்கள் இதை கவனிக்க வேண்டாம். யாமே கர்மாவாகவும் பக்தியாகவும் "நிலை கண்டு சஞ்சாரம் செய்வதால்" இதை எழுதுகிறோம். அதாவது உயர்ந்த உணர்ந்த பக்தியே ஸ்வய அனுபவ ஆத்மஞானமாகும். பக்தி கலவாத ஆத்மஞானம் வறட்சியானதாகும்.

"ராமா என்றால் நாமா, ராம் என்றால் மந்திரம்"

"ஓம்" துறவிகளுக்கும் "ராம்" இல்லறத்தார்களுக்கும் கொடுத்து அதீத (ஞான) நிலைக்கு இட்டுச் செல்வதாகும். அயோத்திய மன்னன் தசரதன் புத்திரனுக்கு பிரம்மரிஷி வஸிஷ்டரால் பெயர் சூட்டியது "ராமா" ஆகும். இந்த நாமாவில் சிவபெருமானாகிய "அரா" என்ற நாமாவில் "ரா" என்ற எழுத்தும், மஹேஸ்வரியாகிய "உமா" என்ற நாமாவில் "மா" என்ற எழுத்தும் இணைந்ததே "ராமா" என்ற நாமாவாகும். இவைகளை அன்பர்கள் அனைவரும் அறிந்ததே! இனி மேலே சொன்ன ஸ்ரீ ஆஞ்சநேயர் ஸ்மரணை செய்த ஸ்ரீ ராம், ஜெயராம், ஜெய ஜெய ராம், ஓம் என்ற ஓர் மந்திரத்திற்கு விளக்கம் தருகிறோம். இதை நான்காகப் பிரித்தார்கள் மகான்கள்.

உ

அதாவது!

ஸ்ரீ ராம் + ஜெயராம் + ஜெய ஜெயராம் + ஓம் என்பதாகும்.

1. **ஸ்ரீராம்** :— முன்பே ஓர் மடலில் ஸ்ரீ க்கும் ஓம் க்கும் விளக்கம் கொடுத்திருக்கிறோம். அதை திரும்பவும் கவனிக்கலாம். அதாவது அந்த மடலில் விளக்கம் தெரிந்து கொள்ளவும். பொதுவாகவே ஸ்ரீ என்றாலே அது மலின மாயை எனச் சொன்னோம். இந்த ஸ்ரீ மனிதவர்க்கத்திற்கு "ஸ்ரீமான்" என்றும் "ஸ்ரீமதி" என்றும் வழங்கப்படுகிறது. அதைபோல் சில தேவ தெய்வங்களுக்கும் ஸ்ரீ வழங்கப்படுகிறது.

"**ஸ்ரீ**" என்றால் விஷயானந்தம் என்றும் அதாவது சிற்றின்பம் என்றும் இது உலக இன்ப துன்ப சம்பந்தப்பட்டதென்றும் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்.

அப்படியானால் விஷயானந்தத்தில் அதாவது சிற்றின்பத்தில் உள்ளவர்கள் கடைத்தேறவேண்டுமானால், அவர்கள் "ஸ்ரீ ராம்" என்னும் மந்திரத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். அதாவது சொந்த, பந்த, பாச, உறவு உணர்ச்சிகளுக்கு ஆட்பட்டு, அறிவே மதிமயங்கி உழலும் ஜீவர்களுக்கு "ஸ்ரீ ராம்" அவஸ்யம் தேவை. இந்த மந்திரம் எப்படி கடைத்தேற்றும் என்றால், "ராமா" என்ற இரண்டெழுத்து நாமாவுக்கே அத்தசக்தி உள்ளதென்று ஸ்ரீ மஹான்கள் சொல்வதால், அவர்கள் எப்படி சொல்கிறார்கள் என்றால்?

"ராமன் உள்ள இடத்தில் காமன் இல்லை"!

"காமன் உள்ள இடத்தில் ராமன் இல்லை"!!

என அழுத்தம் திருத்தமாக ஆணையிட்டுச் சொல்வதால், "ராமா" என்ற நாமாவுக்கே இப்படி அற்புதசக்தி இருக்குமாயின், "ராம்" என்ற மந்திரத்திற்கு எத்தனை சக்தி இருக்குமென்று யாம் சொல்லாமலேயே உணர்ந்து கொள்ளுங்கள். ஆகவே "ஸ்ரீ ராம்" என்ற மந்திரம் தைலதாரை போல் நீங்கள் ஸ்மரித்தால் உலகியல் கடுமையான குணதோஷங்களிலிருந்து அவஸ்யம் நீங்கள் விடுபடுவீர்கள் எனப் பிரமாணமாகச் சொல்கிறோம். இது உறுதி!

இதில் முக்கியமாக ஓர் பொருள் அடங்கி இருக்கிறது. "ஸ்ரீ" என்றதில் இருந்தே "ஸ்திரீகள்" உண்டானது என உணர வேண்டும். இங்கு ஸ்திரீகள் என்றாலே "பெண்கள்" எனப்பொருள்படும். பெண்கள் என்றாலே சபலம் சலனம் சந்தேகம் ஆக இம்மூன்றும் உடையவர்கள் எனப்பொருள்படும். அதாவது

சபலம் :- சின்ன சின்ன ஆசைகள்!

சலனம் :- அந்த ஆசைகள் விரிவடைந்து பெரிய ஆசைகளாக வடிவெடுத்தல். (பேராசை)

சந்தேகம் :- அந்த ஆசைகளின் முடிவிடம் பிளவுபட்ட நூல் போல இரண்டாக பிரிந்து, ஒன்றுபடுத்த முடியாத அவஸ்தை.

ஆக இந்த மூன்றும் ஆண்பாலங்களில் இருந்தாலும் அவர்கள் ஸ்திரீகளே! இங்கு உருவம் பேதம் இல்லை. குணங்களே பேதம். ஆக இந்த குணங்கள் எங்கெங்கு தோன்றினாலும் அங்கு "ஸ்ரீ ராம்" தைலதாரை போல ஓடிக்கொண்டிருக்குமாயின் அங்கு இந்த "ஸ்ரீ ராம்" கண்டு கொள்ளும்.

2. **ஜெய ராம்** :- கண்டு கொண்ட அக்குணங்களை அதாவது சபலம் சலனம் சந்தேகம் ஆகியவைகளை படிப்படியாக குறைத்து, குறைத்து, குறைத்து முடிவில் இல்லாமலேயே பண்ணிவிடும். அதாவது அவைகளை அழித்துவிடும். அதாவது ஜெயத்தைக் கொடுக்கும். அதாவது வெற்றியைக் கொடுக்கும். அதாவது அமைதியைக் கொடுக்கும். அதாவது சாந்தியைக் கொடுக்கும்.

3. **ஜெய ஜெய ராம்** :- ஜெயத்தைக் கொடுத்த இந்த ராம் என்னும் மந்திரமானது இரண்டு ஜெயத்தைக் கொடுக்கும் என இந்த மந்திரம் சொல்கிறது. அது எப்படி இரண்டு ஜெயம் என்றால் முதலில் லௌகீக துர்க்குணங்களாகிய சொந்தம், பந்தம், பாசம், உறவு, முதலியவைகளின் கோர குணங்களிலிருந்து விடுவிக்கிறது. அதாவது "தூலபாவனையை" கெடுக்கிறது.

பின் இறை சம்பந்தாகிய "சாட்சி பாவனையையும்" (சத்வ குணத்தையும்) அதாவது ஈச நிலையையும் தமக்குள்ளாக்கிறது. அதாவது ஜீவன் என்ற ஜீவகளை களைந்து ஆத்மாவாக்கி, ஆத்மாவை பரமாத்மாவாக்கி பின் அதன் நிதித்யாசனத்தால் பரம் பொருளாக மாற்றிவிடுகிறது. இதை சுருக்கமாக சொல்வது என்றால்

ஸ்ரீ ராம் துர்குணங்களை ஒதுக்கிவிடுகிறது.
ஜெயராம் துர்குணங்களை அழித்துவிடுகிறது.
பின் ஜெய ஜெய ராம் என்று உச்சரிக்கும் போது,

ஜீவ நிலையையும், ஈச நிலையையும், இரண்டையும் வெற்றி கொண்டு "அகண்டபாவனை" நிலையை அடையச் செய்கிறது.

ஓம்:— இது யோகமாயை சம்பந்தமாக இருப்பதால் இங்கு எந்த உபாதையும் இல்லையெனலாம். இந்த மந்திரத்தை உச்சரிக்கும் போது தூல பாவனையும், சாட்சிபாவனையையும் வெற்றி கொண்ட இந்த "ராம்" என்ற மஹா மந்திரமானது முடிவிடமாகிய ஓம்காரத்தில் லயமாகி விடுகிறது. இங்குதான் இந்த "ஸ்ரீ ராம், ஜெயராம், ஜெய ஜெய ராம், ஓம்" அதில் ஐக்கியமாகி நாமம் தனதாகி நிற்கிறது. அதாவது இந்த மஹாமந்திரமானது "ஸ்ரீ" இல் ஆரம்பமாகி பின் **ஓம்** இல் முடிவடைந்து விடுகிறது. இங்குதான்,

**"அதுவே நாம், நாமே அது"** என்ற சுத்த அத்வைதம் பரிபூரணமாகிறது.

எம் அன்புக்குழந்தைகளே! உருக்கம் வேண்டும், த்வைதம் வேண்டாம். இந்த ஸ்ரீ ராம், ஜெய ராம், ஜெய ஜெய ராம், ஓம் என ஸ்மரிப்பவர்கள் உள் உருக்கத்தோடு துவைதமாக உணராமல் அத்வைதமாக உணருங்கள். நீங்கள் அந்த நாதாதீதமாகவே ஆகிவிடுவீர்கள். இது ஸத்யம், ஸத்யம், ஸத்யம்!

**அனைத்தும் அந்தகாலாதீத ஒன்றே!**
**அது நீயே, நீயே அது,** அது சுகமே அது நலமே!

பாபா

உணர்ந்து நம் வினைகளை அவனிடம் விடுவதற்கு ஏற்படும் ஓர் சாதனைக் கூடம். வினை முடியும்பரியந்தம் நமக்கு அன்னியமாகத் தோன்றுபவன் வினை முடிந்தால் அவனே நாமாகத் தோன்றும் தற்காலிக சாதனை சோபம். இதில் இறைவனும் நாமும் அந்த ஒன்றில் முடிவுற்றால் அங்கே பிரேமையும் முடிவுபெறும்!

எம்பிகாவின் கதை முடிவின்படி எவரும் தம் மூட்டையை போடவும் முயலவில்லை என்பதை விட முடியவில்லை. அப்படியே தம் மூட்டைகளுடன் கீழே இறங்கி விடுகின்றனர். அந்த மூட்டையின் வியாபாரம் தொடர்ந்து நடைபெறுகிறது. ஊர் ஊராகச் சென்று பற்பல சட்டைகளை (ஜென்மங்களை) எடுத்து எடுத்து வியாபாரம் செய்து கொண்டுதான் இருக்கிறோம் நம் வியாபாரத்திலும் சலிப்பு ஏற்படவில்லை! நாம் போடும் சட்டையிலும் சலிப்பு ஏற்படவில்லை!!

அன்புக் குழந்தாய்! ௐ அட்சரத்தை மந்திரங்களுக்கும் ஸ்ரீ என்ற அட்சரத்தை பகவான் நாமாக்களுக்கும் கொடுக்கிறோம். ஸ்ரீ என்ற அட்சரத்தை மனித இனத்திற்கும் கொடுப்பதுண்டு

அதாவது!

ஸ்ரீமதி என்று பெண்களுக்கும், ஸ்ரீமான் என்று ஆண்களுக்கும் கொடுப்பதுண்டு!

ஓம் நமோ நாராயணா என்றும், ஓம் நமசிவாய என்றும் ஓம் சரவணபவ என்றும், மற்றும் சகஸ்ர நாமாக்களிலும், அஷ்டோத்ரத்திலும், லட்சார்ச்சனையிலும், மற்றும் அனைத்து மந்திரங்களிலும் ஓம் காரம் ஸ்மரிப்பதுண்டு. அங்கு ஓம் ஸ்மரிக்கவில்லையாயின்

"அது உயிரற்ற மந்திரமாக" முடியும்.

என கருதப்படுகிறது. அந்த ஓம் காரமாவது மணியின் நாதம்போல் (கோவில்களில் அடிக்கும் பெரியமணி போல்) "டாண்" என ஆரம்பிக்கும் போது

"ஆரம்பம் ஓ என்ற அலறல்"

"மத்தியில் மௌன நிலையில்
ஓர் ○ (புள்ளி) யுடன் சிதறல்"
முடிவில் ○ (புள்ளி) யுடன்
அடங்கி ஓய்கிறது.

ஓம் ஒன்றே மூலப்பிரகிருதி! அது அனைத்து சக்திகளையும் தம்முள் அடக்கிக் கொள்ளும். அதுவே சுத்தமாயை. அது இயற்கையின் அம்சம். பஞ்சகர்த்தாக்களும் அதனுள் அடக்கம். அதுவே உலகஇயக்கத்தின் ஆரம்பம். அதைப்பற்றிக் கொண்டு தான் ஓர் சாதனையாளன் மேலே செல்ல வேண்டும். அதுவே உலக சிருஷ்டியின் மூல அம்சம். அனைத்து சக்திகளும் சித்திகளும் அதை வைத்தே இயங்குகின்றன. திரிமூர்த்திகளும் அதன் அம்சமாகவே இருக்கிறார்கள்.

"ஓம் அதுவே மூலசூஸ்திரம்"

இந்த ஒன்றிலேயே அண்டரண்டபிண்ட பிரம்மாண்டங்களும், அனைத்து மந்திரங்களும் அனைத்து, அட்சரங்களும்,

விதவிதமாக பாசி மணிகளாக

இந்த நூலில் கோர்க்கப்பட்டிருக்கிறது. இதற்கு அன்னியமாக எதுவும் இல்லை.

"ஸ்ரீ" ஸ்ரீ என்பது அனைத்து தேவதெய்வ
நாமங்களோடும் அலங்கரிக்கும்
ஆகவே இதை மகாமாயை (விஷ்ணுமாயை)
என்றும் சொல்வதுண்டு ஸ்ரீமஹாலட்சுமி
என்றும் ஸ்ரீ அம்பிகை என்றும் ஸ்ரீ கலைவாணி
என்றும் இப்படி அனைத்து சக்தி சொரூபங்க
ளுக்கும்;
ஸ்ரீமந் நாராயணன் என்றும் ஸ்ரீ பரமேஸ்வரன்
என்றும் ஸ்ரீ பிரம்மதேவர் என்றும் ஸ்ரீ தேவே
ந்திரன் என்றும் மூர்த்திகளாகிய கர்த்தாக்
களுக்கும் அனைத்து தேவ தெய்வங்களுக்கும்

"இது அலங்காரத்தை கொடுக்கும்"

இந்த மகாமாயையிலேயே அகில புவனங்களும்
அனைத்து ஜீவ கணங்களும் அசைக்கப்படுகிறார்கள்
உலக இன்ப துன்ப தோற்றம் அனைத்துமே
இந்த ஸ்ரீ யின் மயக்கத்திலே தான் இருக்கிறது.

ஓம் அறிவு ஞானமாகும், இருப்புத்தன்மையாகும்!
ஸ்ரீ ஆரோபமாகும், இயக்கத்தன்மையாகும்!

ஓம் தேவதெய்வங்களின் இருப்புத்தன்மையாகும்!
ஸ்ரீ தேவதெய்வங்களின் இயக்கத்தன்மையாகும்!

ஓம் சக்திகளின் தோற்றமும் உணர்வுமாகும்!
ஸ்ரீ சக்திகளின் ஆடம்பரமும் ஆர்ப்பாட்டமுமாகும்!

ஓம் சாதனையாளர்களின் மன ஒடுக்கமாகும்!
ஸ்ரீ சாதனையாளர்களின் விரிந்த கற்பனையாகும்!

ஓம் இயற்கையின் ஆரண ஒடுக்க வடிவமாகும்!
ஸ்ரீ செயற்கையின் நாமரூப மயக்க வடிவமாகும்!

ஓம் அனைத்திற்கும் ஆதாரம், ஆதரவு, ஆகாரம்!
ஸ்ரீ அனைத்திற்கும் விளையாட்டு, விபரீதம், வேதனை!
"ஓம் சுத்தமாயை; ஸ்ரீ மகாமாயை!"

ஸ்ரீ உலகம், உடல், உறவும், பாசத்திற்கு தேவை
ஓம் உண்மை, உணர்வு ஒடுக்கத்திற்கு தேவை

ஸ்ரீயை பற்றிக் கொண்டால் உலகில் வாழலாம்!
ஓம்காரத்தை பற்றிக் கொண்டால்
மேல்நோக்கிச் செல்லலாம்!


ஸ்ரீயைப்பற்றினால் மோகத்தில் சிக்கி போகத்தில்
ஆழ்ந்து இன்ப துன்பம் சுவைக்கலாம்,


ஓம்காரத்தைபற்றினால் விவேகத்தை அடைந்து
மோட்சஆனந்தம் அடையலாம்!

ஸ்ரீயைப் பற்றினால் அஷ்ட போகத்துடன் வாழலாம்!
ஓம்காரத்தைப்பற்றினால் அஷ்ட ஐஸ்வர்யத்துடன்
அதாவது பக்தி, அமைதி, சாந்தி, விவேகம், வைராக்
யம், மௌனம், மஹா மௌனம், ஞானம் ஆகிய
எட்டுவித "மனோ நல, ஆத்ம சுக,
க்ஷேம, வாழ்த்தோடு" இருக்கலாம்!

குழந்தாய்!
மேலே ஓம் கார
மும், ஸ்ரீ என்ற அட்சரம் இருக்கும் இயங்
கும் விதத்தை சொன்னேன் இதை கவனி!
ஓம்காரம் ஓர் மாயா பீஜமே அதாவது
"மாயை கடந்து செல்லும் ஓர் வித்து"
ஆகும். அதாவது ஜீவன் முக்திக்கு அதாவது
கைவல்ய நிலைக்கு செல்லும் வழியின்
படிக்கட்டுகளாகும்.

"அதுவே முடிந்த முடிவாகும்."






1. ப்ரக்ஞானம் பிரம்மம்
(ரிக் வேதம்)
2. அஹம் பிரம்மாஸ்மி
(யஜுர் வேதம்)
3. தத்-துவம்-அஸி
(சாம வேதம்)
4. அயம் ஆத்மா பிரம்மம்
(அதர்வண வேதம்)

இந்த ஓம் காரம் அனைத்தையும் ஆக்கிறது!
ஆனால் இந்த ஓம் காரத்தை

# நான்கு மஹாவாக்யங்களும்

தமக்குள் அடக்கிக் கொள்கின்றன.
காரணம் "காலாதீத அந்த ஒன்று"

ஓம் காரத்தையும் தாண்டி, நான்கு மஹாவாக்ய
பேருணர்வையும் தாண்டி அதற்கப்
பாலாக நாமம், ரூபம், குணம், குறி, கடந்து எந்த
இருப்புத்தன்மையும் அற்று
"தாம் தாமாக" இருப்பதால் அந்த
நான்கு மஹா வாக்யங்களும் சுற்றி உணர்ந்த
பாமேயன்றி, தொட்டு உணர்ந்த முடியாது.

ஆகவே இந்த நான்கு மஹா வாக்யங்களும்
ஓம் காரம் துணையின்றி அமைதியின்
ஆனந்தமாக அமைந்திருக்கிறது. அதாவது
இந்த நான்கு மஹா வாக்யங்களுக்கும்
ஸ்ரீ யோ ஓம் காரமோ முன் இல்லையென
அறிய வேண்டும். காரணம் அந்த காலாதீத
ஒன்று தோற்றம் ஒடுக்கம் இல்லான்.

தாரும் தலையும் இல்லான். ஊரும்

இல்லான் பேரும் இல்லான். என்றபடி
இருந்தாலும், அதை இன்னது என நான்கு மஹா
வாக்யங்களும் உணர்த்துகின்றன. எப்படி
நான்கு வேதங்களும் இறைவனை உண்டு பண்ணி
அலங்கரித்து அகத்தி வந்த போல, இந்த நான்கு
மஹாவாக்யங்களும் அதை உண்டு பண்ணவில்லை
, அகத்திந்து அலங்கரிக்கவில்லை!
மெய்யுணர்வால் அதை உணர்த்துகிறது"

உ

## முடிவுரை

ஸ்ரீ ராம், ஜெயராம், ஜெய ஜெய ராம், ஓம்.

அன்பும், அறிவும், ஆற்றலும், இன்பமும், ஈகையும், உண்மையும், ஊக்கமும், எண்ணமும், ஏகாந்தமும், ஐயராமையும், ஒன்றும், ஓர்மையும், ஔஷதமாயும், ஃ தொன்றுயும் அமைந்த எம் செல்வக் குழந்தைகளே!

1. பணிவே உங்கள் பாதையாக கொள்ளுங்கள்.
2. எங்கும் எக்காலத்தும் குற்றம் குறை காணதீர்.
3. அப்படி தோற்றின் அது உங்களிடமே என உணர்ந்து உங்களை திருத்திக் கொள்ளுங்கள்.
4. நான், எனது, என்னுடையது இந்த மூன்றும் உங்கள் சத்ரு.
5. அன்பு, பொறுமை, கருணை இந்த மூன்றும் உங்கள் மித்ரு.
6. எந்த ஜீவனிடமும் பேதம் காணதீர்.
7. இறைவனை தேடவந்த நீங்கள் வீணாக இறையை தேடவேண்டாம்.
8. பிறர் குற்றங்களை மறத்தல், மன்னித்தல், விட்டுகொடுத்து விலகுதல் இதுவே உங்கள் சாதனை.
9. பசி, பணம், பகவான் என போகாதே! பகவான், பணம், பசி என இறங்கி வருவாயாக.
10. ஸ்ரீ குருநாமமும், ஸ்ரீ இறைநாமமும் உன் இருகண்கள்.

எம் அன்புச் செல்வங்களே!

மேலே கண்ட இந்த பத்து வாக்கியங்களையும் உங்கள் சிரமேற் கொள்ளுங்கள் இந்த வைத்தியம் உங்கள் ஸ்ரீ பாதங்களின் தூளியாக இருந்து உங்களுடன் துணை இருப்போம்! இதுவே எம் முடிவுரை!

"அனைத்தும் ஒன்றே, அது நலம், சுகம்."
"அதுயாமே, யாமே அது, அதுவே நீ"

பாபா




Adobe of Love

You are Everything!